1972 ஆகஸ்ட் 19]

திரு சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நீண்ட காலமாகத் தஞ்சை மாவட்ட முப்படையினர் வாரியத்தில் முன்னாள் படைவீரர் பயன்படுத்தத் தக்க விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) & (இ) எழுது பொருள் கிடைக்கப்பெறாததால், தஞ்சாவூரில் வாழும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு, தஞ்சாவூர் மாவட்ட தரை, கப்பல் விமானப்படை வாரிய நிறுவனத்தால் தேவையான கடன் படிப்பு உதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் கொடுக்க இயலவில்லை.

(உ) இது இணைப்பு நிதியின் பரிசீலனைக்கு கொண்டு வரப்பட்டது. இணைப்பு நிதியின் செயலாளர் அரசு மேலாண்மை குழுவின் ஒப்புதல் பெற்று, அரசு அச்சகத்தில் படிவங்கள் அச்சடிக்கப்பெற்று, 23—11—1971 அன்றே தஞ்சாவூர் மாவட்ட தரை, கப்பல், விமானப்படை நிறுவனம் உள்பட எல்லா மாவட்ட முப்படை வாரியங்களுக்கும் படிவங்கள் அனுப்பப்பட்டு விட்டன. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமல் இருக்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(1) ஆளுநரிடமிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have received a message from the Governor recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill, 1972.